தொந்தரவான, ஆபத்துமிக்க கைத்தொழில் அல்லது வியாபாரம் - 2021

252 ஆவது அதிகாரத்தில் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 147 ஆம் பிரிவின் கருமங்களுக்காக 1989 ஆம் ஆண்டின் சனவரி 20 ஆந் திகதி 541/17 ஆம் இலக்கத்தைக் கொண்ட ஏற்றுக்கொள்ளப்பட்ட இடைக்கால யாப்பில் xxvii ஆம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள தொந்தரவான, ஆபத்துமிக்க கைத்தொழில் என்ற வகையில் உள்ளீர்க்கப்பட்டு I ஆம் அட்டவணையின் பிரகாரம் கீழ்க்காணும் வர்த்தகம் மற்றும் கைத்தொழிலும் அதற்கு சேர்க்கப்பட வேண்டும்,

252 ஆவது அதிகாரத்தில் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 147 ஆம் பிரிவின் கருமங்களுக்காக 1989 ஆம் ஆண்டு சனவரி 20 ஆந் திகதிய 541/17 ஆம் இலக்கத்தைக் கொண்ட ஏற்றுக்கொள்ளப்பட்ட இடைக்கால யாப்பில் xxvii ஆம் பகுதியில் இலக்கம்

15 இல் காணப்படும் ஆபத்துமிக்க கைத்தொழில் என்ற வகையில் உள்ளீர்க்கப்பட்டு II ஆம் அட்டவணையின் பிரகாரம் கீழ்க்காணும் வர்த்தகம் மற்றும் கைத்தொழில் அதில் சேர்க்கப்பட வேண்டும் எனவும், 2020, நவெம்பர் மாதம் 11 ஆந் திகதி நடைபெற்ற பொலன்னறுவை மாநகர சபைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

மாநகர முதல்வர்,
பொலன்னறுவை மாநகர சபை,
பொலன்னறுவை.

மாநகர சபை அலுவலகம்,
பொலன்னறுவை,
2020, நவெம்பர் 11.

I ஆம் அட்டவணை

தொல்லை தரும் வர்த்தகம்

1. பசளை உற்பத்தி
2. பசளை களஞ்சியப்படுத்தி வைத்தல்
3. கோழி விற்பனை நிலையம் ஒன்றை நடாத்துதல்
4. கருங்கல் உடைத்தல், கபொக் வெட்டுதல்
5. கிரவல் வெட்டுதல்
6. மிருக வைத்திய நிலையம் ஒன்றை நடாத்துதல்
7. இறப்பர் தயாரித்தல்
8. பசளை, சுண்ணாம்பு அல்லது கிராபைட் வைத்திருந்த சாக்கு களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல் அல்லது அவைகளிலிருந்து தூசி அப்புறப்படுத்தல்
9. பாக்கு தயாரித்தல்
10. செம்மறியாடு அல்லது ஆடு அல்லது இரு வகையும் 10 இற்கு மேல் அடைத்து வைப்பதற்கான கொட்டகை அல்லது காலை ஒன்றை நடாத்துதல்
11. ஓடு கொங்கிறீட் குழாய் மற்றும் கொங்கிறீட் பொருட்கள் தயாரித்தல்
12. சுண்ணாம்பு களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்
13. பம்பாய் வெங்காயம் 05 தொன்னுக்கு மேல் களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்
14. உருளைக்கிழங்கு 05 தொன்னுக்கு மேல் களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்
15. சிரட்டைக் கரி ஒரு தொன்னுக்கு மேல் களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்
16. பழைய உலோகப் பொருட்கள் களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்
17. கருவாடு 10 தொன்னுக்கு மேல் களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்
18. உயிரற்ற பதப்படுத்தப்பட்ட கோழி போன்ற பிராணிகளின் விற்பனைக்காக கடை ஒன்றை நடாத்துதல்
19. பெற்றரி நிரப்பும் அல்லது களஞ்சியப்படுத்தி வைத்தலுக்கான நிறுவனம் ஒன்றை நடாத்துதல்
20. டயர் மறுசீரமைத்தல், அல்லது கட்டை வெட்டுதல் நிறுவனம் ஒன்றை நடாத்துதல்
21. டயர், டியூப், வொல்கனைசிங் செய்தல் நிறுவனம் ஒன்றை நடாத்துதல்
22. வெற்று போத்தல் 100 க்கு மேற்பட்ட தொகையினை களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்
23. சவப் பெட்டி தயாரித்தல் அல்லது களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்
24. வீட்டு உபகரணங்கள் தயாரித்தல், அல்லது களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்
25. மாணிக்க வியாபாரிகளினால் மாணிக்கம் வெட்டுதல், செம்மைப்படுத்தல்
26. பிரம்பிலான பொருட்கள் தயாரித்தல் அல்லது களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்
27. கொங்கிறீட் அல்லது கழி குழாய் களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்
28. இயந்திர வலுவைப் பயன்படுத்தி துணி நெய்தல் தொழிற்சாலை ஒன்றை நடாத்துதல்
29. மாவு அல்லது வாசனைத் திரவியங்கள் அரைத்தல்
30. இறப்பர் பொருட்கள் தயாரித்தல்
31. பொலிதீன், செலேயுலைட் அல்லது பர்ஸ்பெக்ஸ் உற்பத்தி பொருட்களை தயாரித்தல் களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்
32. பூட் சப்பாத்து மற்றும் பாதணி தயாரித்தல்

II ஆம் அட்டவணை

ஆபத்துமிக்க வர்த்தகம்

1. வாயு (Gas) மற்றும் வாயு (Gas) அடுப்பு விற்பனை நிறுவனம்
2. வேல்டிங் வேலை செய்தல் நிலையம்
3. கடைசல் பட்டறை மூலம் இரும்பு கடைசல் செய்யும் நிலையம்
4. விவசாய இரசாயனப் பொருட்கள் விற்பனை நிறுவனம்
5. பால் சாலை ஒன்றை நடாத்தும் நிறுவனம்
6. எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றை/எரிபொருள் களஞ்சியம் ஒன்றை நடாத்தும் நிறுவனம்
7. கருங்கல் வேலைத்தலம் /கருங்கல் க்ரசர் நிலையம் ஒன்றை நடாத்தும் நிறுவனம்
8. ஒக்சிஜின் சார்ந்த ஒட்டு வேலை நிலையம் ஒன்றை நடாத்தும் நிறுவனம்
9. பெற்றரி சாஜ் பண்ணல் நிலையம் ஒன்றை நடாத்தும் நிறுவனம்
10. குளிர் பான உற்பத்தி அல்லது களஞ்சியப்படுத்தல் நிலையம் ஒன்றை நடாத்தும் நிறுவனம்
11. இயந்திரங்கள் மூலம் கம்பு ஆலை/தச்சு வேலை செய்தல் நிறுவனம்
12. ஆடைத் தொழிற் சாலை ஒன்றை நடாத்தும் நிறுவனம்
13. வாகனங்கள் வர்ணமிடல் நிறுவனம்
14. மின் உபகரணம் அல்லது வானொலி/தொலைக்காட்சி பெட்டி திருத்தம் செய்தல் நிறுவனம்
15. கொப்பரா களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்
16. இயந்திரம் மூலம் தேங்காயெண்ணெய் உற்பத்தி அல்லது தேங்காய் எண்ணெய் 500 கலன்களுக்கு மேற்பட்ட அளவில் களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்
17. எண்ணெய் வடித்தலுக்கான ஒரு செக்கு அல்லது கை இயந்திரம் வைத்திருத்தல்
18. நார் உற்பத்தி செய்தல், அல்லது களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல், அல்லது உற்பத்தி செய்தலும் களஞ்சியப்படுத்தி வைத்திருத்தலும்
19. தீப்பெட்டி தயாரித்தல்
20. ஓடுகள் 500 க்கு மேற்பட்ட தொகையினை களஞ்சியப்படுத்தி வைத்தலுக்கு யார்ட் அல்லது களஞ்சியம் ஒன்றை நடாத்துதல்
21. செங்கல் 500 க்கு மேற்பட்ட தொகையினை களஞ்சியப்படுத்தி வைத்தலுக்கு யார்ட் அல்லது களஞ்சியம் ஒன்றை நடாத்துதல்
22. கபுக் கல் 250 க்கு மேற்பட்ட தொகையினை களஞ்சியப்படுத்தி வைத்தலுக்கு யார்ட் அல்லது களஞ்சியம் ஒன்றை நடாத்துதல்
23. மரப்பெட்டி தயாரித்தல் அல்லது மரப்பெட்டி தொன் 05 க்கு மேற்பட்ட தொகையினை களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்
24. தும்பு உற்பத்தி
25. பசளை, சுண்ணாம்பு, அல்லது கிராபைட் வைத்திருந்த சாக்கு தவிர்ந்த வேறு சாக்குகள் 100 க்கு மேற்பட்ட தொகையினை களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்
26. இனிப்புப் பண்டங்களின் உற்பத்தி
27. சிரட்டைக் கரி தவிர்ந்த இதர கரி ஒரு தொன்னுக்கு மேற்பட்ட அளவு களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்
28. இயந்திர வலு பயன்படுத்தப்பட்டு உடை தைத்தல் நிறுவனமொன்றை நடாத்துதல்
29. ஸ்ப்ரே பெயின்ட் வேலை செய்தல் நிலையமொன்றை நடாத்துதல்
30. பாவிக்கப்பட்ட கடதாசி கி. கி. 250 க்கு மேற்பட்ட தொகையை களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்
31. பாவிக்கப்பட்ட ஆடைகள் களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்
32. கையால் அல்லது கால் கம்புகளால் செயற்படுத்துகின்ற இயந்திரமொன்றினால் இயங்கும் அச்சகம்.
33. இயந்திர வலுவின் மூலம் இயங்கும் அச்சகம்
34. மோட்டார் வாகனங்கள் திருத்தும் நிலையம் ஒன்றை நடாத்துதல்
35. மோட்டார் வாகனங்கள் சேர்விஸ் பண்ணல்
36. மோட்டார் வாகனங்கள் திருத்தப்படுகின்ற, இரும்பு மற்றும் உலோக வேலைகள் செய்கின்ற, கராஜ் அல்லாத வேறு நிறுவனம்
37. ஒக்சிஜன் மற்றும் வேல்டிங் வேலை செய்யப்படுகின்ற, மோட்டார் வாகனங்கள், திருத்தப்படுகின்றதும், இரும்பு மற்றும் உலோக வேலைகள் செய்கின்றதும், கராஜ் அல்லாததுமான வேறு நிறுவனம் ஒன்றை நடாத்துதல்.
38. புதிய டயர் அல்லது டியுப் 150 க்கும் அதிகமான தொகையில் களஞ்சியப்படுத்தி வைத்தல்.

III ஆம் அட்டவணை
ஆபத்துமிக்கதும் தொல்லை மிக்கதுமான வர்த்தகம்

1. ட்ரை கிளீன், வேலை செய்கின்ற நிறுவனம் ஒன்றை நடாத்துதல்
2. இயந்திர வலு பாவிக்கப்படாத, இலக்ரோ ப்லேடிங், வேலை க்ரோமியம் பூச்சு செய்கின்ற, தங்க முலாம் பூசுதல், வெள்ளிப் பூச்சு, அல்லது செம்புப் பூச்சு வேலை செய்தல் நிறுவனம் ஒன்றை நடாத்துதல்
3. இயந்திர வலு பாவிக்கப்படுகின்றதும், இலக்ரோ ப்லேடிங் வேலை செய்யப்படுகின்றதுமான ஒரு கராஜும் இல்லாத நிறுவனம் ஒன்றை நடாத்துதல்
4. வாண வேடிக்கை பொருட்கள் களஞ்சியப்படுத்தி வைத்தல்.
5. தூர் வடிக்கின்ற நிறுவனம் ஒன்றை நடாத்துதல்
6. குளிரூட்டி திருத்துதல், ரீகன்டிசன் செய்தல், அல்லது பரிசோதித்தலுக்கான நிறுவனம் ஒன்றை நடாத்துதல்
7. வெடிக்கும் பொருட்கள், இரசாயனப் பொருட்கள், மற்றும் உரம் விற்பனை செய்தல் நிறுவனம் ஒன்றை நடாத்துதல்

IV ஆம் அட்டவணை
அருவருப்பான வர்த்தகம்

1. போத்தல், பழைய இரும்பு, வெற்றுபூளி, சாக்கு, கார்ட்போட் சேகரித்தல் நிறுவனம்
2. சவப்பெட்டி விற்பனைக் கடை, ஒன்றை நடாத்தும் நிறுவனம்
3. வர்ண இரசாயன கூடம், புகைப்பட கூடம் ஒன்றை நடாத்துதல்
4. சுண்ணாம்பு போரணை ஒன்றை நடாத்துதல்
5. புகையிலை உலர்த்தல் நிலையம் ஒன்றை நடாத்துதல்
6. நெல், மிளகாய், தானிய வகைகள், பதர் நெல், தேங்காய் அரைத்தல் நிலையம் ஒன்றை நடாத்துதல்
7. கோழி பண்ணை ஒன்றை நடாத்துதல்
8. பன்றிகள், ஆடுகள், மாட்டு பட்டிகளை நடாத்துதல்
9. குளிரூட்டிய கோழி இறைச்சி விற்பனை நிலையம் ஒன்றை நடாத்துதல்
10. சீமேந்துடன் தொடர்பான பொருட்களை உற்பத்தி செய்தல்
11. வர்ண வகைகள் அல்லது வார்னிஸ் போன்றவற்றை களஞ்சியப்படுத்தல் நிலையம்
12. இனிப்புப் பண்டங்களை உற்பத்தி செய்தல் வர்த்தகம்
13. வாகனங்கள் கழுவும் வர்த்தகம்
14. மனைப் பொருட்கள் உற்பத்தி செய்தல் வர்த்தகம்
15. வாகனங்கள், முச்சக்கர வண்டிகள், மோட்டார் பைசிக்கிள் திருத்துதல், சேர்விஸ் செய்தல் நிலையம் ஒன்றை நடாத்துதல்

12 - 255/4

பொலன்னறுவை மாநகர சபை

அபிவிருத்தி செய்யப்படாத காணிகள் மீதான வரி விதிப்பனவு - 2021

252 ஆவது அதிகாரத்தில் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 247 (ஏ) பிரிவின் பிரகாரம் மாநகர சபைக்கு கிடைத்துள்ள அதிகாரத்தின் பிரகாரம் பொலன்னறுவை மாநகர சபை அதிகாரத்திற்கு உட்பட்ட பிரதேசத்தினுள் அமைந்துள்ள கட்டடங்கள் கட்டுவதற்கு அல்லது நிரந்தர அல்லது முறைப்பிரகாரம் விவசாயம் செய்வதற்கு உகந்ததாக இருக்கும் சந்தர்ப்பத்தில் (வயற்காணி தவிர்ந்த) அல்லது யதார்த்தமான செலவில் இடத்தில் மேற்சொன்ன கருமங்களுக்காக அபிவிருத்தி செய்ய முடியாத பட்சத்தில் அவ்வாறான ஒரு இடத்தில்,

(அ) கட்டடங்கள் எதுவும் நிர்மாணிக்கப்பட இல்லையானால், அல்லது

(ஆ) அந்த இடம் (வயற் காணி தவிர்ந்த) முறையான விதத்தில் நிலையானதாக பயிர் செய்கைக்கு உட்படுத்தப்படாத சந்தர்ப்பத்தில், அல்லது

(இ) அந்த இடத்தில் கட்டப்பட்டிருக்கின்ற கட்டடங்களுக்கு உண்மையாகவே அகப்பட்டிருக்கின்ற பூமியின் அளவு 1 : 2 என்ற விகிதத்திற்கு குறைவாக இருக்கும் பட்சத்தில்

அந்த இடம் அபிவிருத்தி செய்யப்படாத இடமாக கருதப்பட்டு அவ்வாறான அபிவிருத்தி செய்யப்படாத இடமொன்று எனக் கருதப்படும் ஓர் இடத்தின் மீது 2021 ஆம் வருடத்திற்காக ஒவ்வொரு இடத்தினதும் மூலதன பெறுமதியில் 0.5% (நூற்றுக்கு ஐந்து) வருடாந்த வரி விதிப்பதற்கும், மேற்சொன்ன அபிவிருத்தி செய்யப்படாத இடம் மீதான குறிப்பிட்ட வரி 2021, மார்ச்சு 31 ஆந் திகதிக்கு முன்னர் பொலன்னறுவை மாநகர சபைக்கு செலுத்தப்படல் வேண்டும் என்ற ஒரு பிரேரணை 2020, நவெம்பர் மாதம் 11 ஆந் திகதி நடைபெற்ற பொலன்னறுவை மாநகர சபைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

மாநகர முதல்வர்,
பொலன்னறுவை மாநகர சபை,
பொலன்னறுவை.

மாநகர சபை அலுவலகம்,
பொலன்னறுவை,
2020, நவெம்பர் 11.

12-255/5

பொலன்னறுவை மாநகர சபை

இதர சேவைகள் சார்பான கட்டண அறவீடு - 2021

பொலன்னறுவை மாநகர சபையினால் நகர சபை அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தினுள் கீழ்க்காணும் தேவைப்பாடுகள் தொடர்பான பணிகள் நிறைவேற்றப்படுகின்ற போது பின்வரும் கட்டணங்களை அறவிடுவதற்கு 2020.11.11 ஆந் திகதி நடைபெற்ற பொலன்னறுவை மாநகர சபைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

மாநகர முதல்வர்,
பொலன்னறுவை மாநகர சபை,
பொலன்னறுவை.

மாநகர சபை அலுவலகம்,
பொலன்னறுவை,
2020, நவெம்பர் 11.

1.	வீதி எல்லைக் கோடு அல்லது கையேற்காமை சான்றிதழ் வழங்கல் கட்டணம்	ரூபா 750.00
2.	நீண்ட கால காணி அனுமதிப்பத்திரம் வழங்கலுக்கான கட்டணம்	ரூபா 1000.00
3.	வீதிரேகை விண்ணப்பப்பத்திரக் கட்டணம்	ரூபா 50.00
4.	கட்டட நிர்மாண விண்ணப்பப்பத்திரக் கட்டணம்	ரூபா 300.00
5.	காணி துண்டாக்கல் அனுமதித்தல் விண்ணப்பக் கட்டணம்	ரூபா 200.00
6.	கட்டட விண்ணப்பம் பரிசீலனை செய்தல் கட்டண மற்றும் உடன்பாட்டு சான்றிதழ்	
I.	நிர்மாணத்துக்காக ஒவ்வொரு சதுர அடிக்கும் சதம் 1.00 வீதம் (வதிவிடம்)	
II.	நிர்மாணத்துக்காக ஒவ்வொரு சதுர அடிக்கும் ரூபா 3.00 வீதம் (வர்த்தக)	
7.	காணி துண்டாக்கல் துணை பிரிவு பரிசீலனை செய்தல் கட்டணம் வதிவிடம்/வர்த்தகம்/ஒரு காணித் துண்டு ஒன்றுக்கு அறவீடுகளில் 15% எனும் அடிப்படையில்	
8.	வரிப்பண பெயர் மாற்றம் செய்தலுக்காக பரிசீலனை கட்டணம்	ரூபா 500.00
9.	வரிப்பணம் திருத்துதல் கட்டணம்	ரூபா 100.00
10.	மணல் மற்றும் கிரவல் வீதி பழுதாக்கல் கட்டணம்	ரூபா 1000.00
11.	மணல் மற்றும் கிரவல் வீதிகளின் ஓரம் பழுதாக்கல் கட்டணம்	ரூபா 2000.00
12.	கதுறுவெல பஸ்நிலைய கடைகள் மாற்றிக்கொடுத்தல் கட்டணம்	ரூபா 200000.00

13.	சபைக்குச் சொந்தமான ஏனைய கடைகள் மாற்றிக்கொடுத்தல் கட்டணம்	ரூபா 150000.00
14.	சுற்றாடல் அனுமதிப்பத்திர விண்ணப்பப்படிவக் கட்டணம்	ரூபா 100.00
15.	சுற்றாடல் அனுமதிப்பத்திர அறவிடல் பத்திரக் கட்டணம்	ரூபா 50.00

ஏனைய தேவைகளின் பேரில் தார், கொங்கிறீட், கல்பதித்த, வீதிகளை பழுதாக்கும் போது சபையின் தொழில் நுட்ப அதிகாரிகளின் செலவுக்கூற்றுக்கிணங்க புனர்நிர்மாணஞ் செய்தலுக்கான கட்டணம் அறவிடப்படும். இதற்காக அரச கட்டணமும் செலுத்தப்படல் வேண்டும்.

12-255/6

பொலன்னறுவை மாநகர சபை

விநோத வரி அறவிடுதல் - 2021

பொலன்னறுவை மாநகர சபை அதிகார பிரதேசத்தினுள் இடம்பெறும் விநோத செயற்பாடுகள் தொடர்பாக 1984 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க விநோத வரி (திருத்த) சட்டத்தில் திருத்தப்பட்ட 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க விநோத வரிக் கட்டளைச் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள விநோத செயற்பாடுகளுக்காக அறவிடப்படும் நுழைவுக் கட்டணத்தில் 10% விநோத வரியொன்று விதித்து அறவிடுவதற்கு 2020, நவெம்பர் மாதம் 11 ஆந் திகதி நடைபெற்ற பொலன்னறுவை மாநகர சபைக் கூட்டத்தில் சபையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

மாநகர முதல்வர்,
பொலன்னறுவை மாநகர சபை,
பொலன்னறுவை.

மாநகர சபை அலுவலகம்,
பொலன்னறுவை,
2020, நவெம்பர் 11.

12 - 255 /7

பொலன்னறுவை மாநகர சபை

பொது நூலகம் மற்றும் நெசனல நிலையத்தின் சேவைக் கட்டணம் அறவிடல் - 2021

பொலன்னறுவை மாநகர சபையினால் சேவைகளை வழங்குவதற்காக அமைக்கப்பட்டுள்ள நெனசல மத்திய நிலையத்தின் கீழ்க்காணும் சேவைகளுக்காகன கட்டணம் என்ற வகையில் கீழ்க்காணும் ஒரு தொகைப் பணத்தை அறவிடுவதற்கு 2020, நவெம்பர் 11 ஆந் திகதி நடைபெற்ற பொதுச் சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

மாநகர முதல்வர்,
பொலன்னறுவை மாநகர சபை,
பொலன்னறுவை.

மாநகர சபை அலுவலகம்,
பொலன்னறுவை,
2020, நவெம்பர் 11.

அட்டவணை

ஒரு வருடத்திற்குரிய பதிவுக் கட்டணம்

பாடசாலை மாணவர் ஒருவருக்கு	ரூபா 100.00
வயது வந்த ஒருவருக்கு	ரூபா 300.00
உறுப்பினர் புதுப்பித்துக் கொள்ள	ரூபா 50.00

இணையத்தள வசதிகள் வழங்கல் ஒரு மணித்தியாலத்திற்கான கட்டணம்

பாடசாலை மாணவர் ஒருவருக்காக ஒரு மணித்தியாலத்திற்கு	ரூபா 20.00
வயது வந்த ஒருவருக்காக ஒரு மணித்தியாலத்திற்கு	ரூபா 50.00

ஸ்கேனர் வசதிகள் வழங்கல் பிரதி ஒன்றுக்கான கட்டணம்

ஸ்கேனர் அச்சுப் பிரதி ஒன்றுக்கு	ரூபா 20.00
க.பொ.த. சாதாரண அல்லது உ.த. விண்ணப்பப்படிவத்தை ஒன்லைனில் நிரப்ப	ரூபா 50.00
பல்கலைக்கழக நுழைவு விண்ணப்பப்படிவத்தை ஒன்லைனில் நிரப்ப	ரூபா 150.00
அறிவியல் தாதியர் சேவை விண்ணப்பப்படிவத்தை ஒன்லைனில் நிரப்ப	ரூபா 50.00
கடினமான உயர் கல்வி டிப்ளோமா விண்ணப்பப்படிவத்தை ஒன்லைனில் நிரப்ப	ரூபா 100.00

12 -255 /8

பொலன்னறுவை மாநகர சபை

கல்லறை மற்றும் தகனம் செய்வதற்காக கட்டணம் அறவிடல் - 2021

பொலன்னறுவை மாநகர சபை அதிகார பிரதேசத்தினுள் மயான பூமி ஒன்றில் பூதவுடலொன்றை புதைத்தல்/தகனம் செய்தல் / நினைவுச்சின்னம் அமைத்தல் தொடர்பாக கீழ்க்காணும் கட்டணங்களை அறவிடப்படல் வேண்டும் என்ற ஒரு தீர்மானம் 2020, நவெம்பர் 11 ஆந் திகதி நடைபெற்ற பொலன்னறுவை மாநகர சபைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

மாநகர முதல்வர்,
பொலன்னறுவை மாநகர சபை,
பொலன்னறுவை.

மாநகர சபை அலுவலகம்,
பொலன்னறுவை,
2020, நவெம்பர் 11.

1. சடலமொன்றை தகனம் செய்வதற்கு (மாநகர சபை அதிகார எல்லை பிரதேசத்திற்குள் சடலமொன்றிற்காக ரூபா 500.00)	-	ரூபா 1,000.00
2. நினைவுச் சின்னம் ஒன்றை கட்டுவதற்கு (சதுர அடி 01 க்கு) (அதிகபட்ச சதுர அடி 2.5 மட்டுமே)	-	ரூபா 500.00
3. சடலமொன்றை தகன அறையில் தகனம் செய்வதற்கு (நடைமுறையிலுள்ள எரிவாயு (gas) வினுடைய விலையைப் பொறுத்து இந்த கட்டணம் மாறுபடலாம்)	-	ரூபா 10,000.00

12 - 255/9

பொலன்னறுவை மாநகர சபை

பார ஊர்திகள் குத்தகைக்கு விடுதல்- 2021

பொலன்னறுவை மாநகர சபைக்குச் சொந்தமான பார வாகனங்கள் என்ற வகையில் குத்தகை அடிப்படையில் வழங்கக்கூடிய வாகனங்களுக்காக கீழ்க்காணும் கட்டணங்களை அறவிடுவதற்கும் அவ்வாகனங்களை கொண்டு சென்ற பின்னர் இயந்திர கோளாறு அல்லது தவிர்க்க முடியாத நிகழ்வுகள் தவிர்ந்த வீணாக வைத்துக் கொண்டிருக்கும் ஒவ்வொரு நாளின் மீதும் கட்டணம் செலுத்தப்பட

வேண்டும் எனவும் இதற்கு மேலதிகமாக பிணை வைப்புப் பணமாக ரூபா 1000.00 பணம் வைப்பு செய்யப்படல் வேண்டும் எனவும் எரிபொருள் இன்றி பெற்றுக் கொள்ளப்படுமானால் தேவையான எரிபொருள் மற்றும் ஓயில் ஆகியவற்றை விண்ணப்பதாரியினால் வழங்கப்படல் வேண்டும் எனவும் 2020, நவெம்பர் மாதம் 11 திகதி நடைபெற்ற பொலன்னறுவை மாநகர சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

மாநகர முதல்வர்,
பொலன்னறுவை மாநகர சபை,
பொலன்னறுவை.

மாநகர சபை அலுவலகம்,
பொலன்னறுவை,
2020, நவெம்பர் 11.

தொடர் இல.	வாகன வகை	எரிபொருள் இல்லாமல் மணித்தியாலமொன்றிற்கு ரூபா ச.	எரிபொருள் சகிதம் மணித்தியாலமொன்றிற்கு ரூபா ச.	குறைந்த மணித்தியால/கி.மீ. அளவு
1.	பெக்கோ லோடர்	2500.00	3500.00	2 மணித்தியாலம்
2.	டிபர் வாகனம்	35.00	70.00	100 கி.மீ.
3.	புல் வெட்டும் ட்ரக்டர்	1000.00		
4.	ட்ரக்டர் களிய - 01 தடவைக்கு ரூபா 7500.00			
7.	தண்ணீர் பவுசர் - 01 தடவைக்கு ரூபா 1000.00 மற்றும் கி.மீ. 1 க்கு ரூபா 75.00			

12 - 255/10

பொலன்னறுவை மாநகர சபை

விளையாட்டு மைதானம் மற்றும் கூட்ட மண்டபம் வாடகைக்கு விடுதலுக்கான கட்டணம் - 2021

பொலன்னறுவை மாநகர சபையினால் நிருவகிக்கப்படுகின்ற விளையாட்டு மைதானம், கூட்ட மண்டபம் மற்றும் நாட்டிய அரங்கு போன்றவற்றை வாடகைக்கு விடுதல் தொடர்பான கட்டணங்கள் கீழ்க்காணும் விதத்தில் அறவிடப்படல் வேண்டும் என்ற ஒரு பிரேரணை 2020, நவெம்பர் 11 ஆந் திகதி நடைபெற்ற பொலன்னறுவை மாநகர சபைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

மாநகர முதல்வர்,
பொலன்னறுவை மாநகர சபை,
பொலன்னறுவை.

மாநகர சபை அலுவலகம்,
பொலன்னறுவை,
2020, நவெம்பர் 11.

மைத்ரிபால சிறிசேன நாட்டிய அரங்கு (புத்தி மண்டபம்)

01. வர்த்தக வேலைத் திட்டங்களுக்கு மு. ப. 6.00 மணி தொடக்கம் பி. ப. 6.00 மணி வரை கட்டணம் -	ரூபா 25,000.00
02. வர்த்தகம் அல்லாத வேலைத் திட்டங்களுக்கு மு. ப. 6.00 மணி தொடக்கம் பி. ப. 6.00 மணி வரை -	ரூபா 13,500.00
03. பாலர் பாடசாலை மற்றும் பாடசாலை நிகழ்வுகளுக்காக	ரூபா 10,000.00

இதற்காக நாட்டிய அரங்கை ஒதுக்கிக் கொள்வதற்காக பிணை வைப்புப்பணம் ரூபா 10,000.00
இதற்காக அரசாங்க கட்டணம் அறவிடப்படும்

விளையாட்டு மைதானம்

01. இசைக் கச்சேரி, காணிவேல் ஆகியவற்றிற்காக ஒரு நாளைக்கு	ரூபா 15,000.00
* பிணை வைப்புப் பணம்	ரூபா 5,000.00
* கழிவுப் பொருள் அகற்றல் சம்பந்தமாக இதற்காக அசாங்க கட்டணங்களும் செலுத்தப்படல் வேண்டும்	ரூபா 5,000.00
02. இதர தேவைகளுக்காக	ரூபா 5,000.00

பொலன்னறுவை ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் (பேரங்காடி) (PCC)

* பேரங்காடியை முன்பதிவு செய்ய	ரூபா 10,000.00
* வைப்புப் பணம்	ரூபா 5,000.00

12 - 255/11

பொலன்னறுவை மாநகர சபை

கழிவுப் பொருள் அகற்றல் கட்டணம் - 2021

பொலன்னறுவை மாநகர சபை அதிகார பிரதேசத்தினுள் (வீடுகளிலிருந்து அகற்றப்படுகின்ற சமையலறை கழிவுகள் தவிர்ந்த) சகல வர்த்தக நிலையங்களிலிருந்தும் அகற்றப்படுகின்ற கழிவுப் பொருட்களுக்காக ஒவ்வொரு வர்த்தக நிலையத்திலிருந்தும் ஒரு மாதத்தில் அகற்றப்படுகின்ற கழிவுப் பொருட்களின் அளவின் பிரகாரம் ஒரு கட்டணம் அறவிடுவது பொருத்தம் என்ற ஒரு தீர்மானம் 2020, நவெம்பர் 11 ஆந் திகதி நடைபெற்ற பொலன்னறுவை மாநகர சபைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.

01. இத்துப் போகின்ற கழிவுப் பொருள் ஒரு கிலோ - ரூபா 50.00
02. இத்துப் போகாத கழிவுப் பொருள் ஒரு கிலோ - ரூபா 5.00

மாநகர முதல்வர்,
பொலன்னறுவை மாநகர சபை,
பொலன்னறுவை.

மாநகர சபை அலுவலகம்,
பொலன்னறுவை,
2020, நவெம்பர் 11.

12 - 255/12

பொலன்னறுவை மாநகர சபை

கொம்போஸ்ட் உரம் விற்பனைக்காக கட்டணம் அறவீடு - 2021

பொலன்னறுவை மாநகர சபையினால் கல்லேல்ல கழிவுப் பொருள் அகற்றல் வேலைத்திட்டத்தின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட உரத்தினை விற்பனை செய்யும் போது கீழ்வரும் கட்டணப்படி விற்பனை செய்வது பொருத்தமானது என்ற ஒரு பிரேரணை 2020, நவெம்பர் 11 ஆந் திகதி நடைபெற்ற பொலன்னறுவை மாநகர சபைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.

01. 5 கி. கி. பாரமுடைய உரப்பை - ரூபா 50.00
02. 25. கி. கி. பாரமுடைய உரப்பை - ரூபா 250.00

மாநகர முதல்வர்,
பொலன்னறுவை மாநகர சபை,
பொலன்னறுவை.

மாநகர சபை அலுவலகம்,
பொலன்னறுவை,
2020, நவெம்பர் 11.

12 - 255/13

பொலன்னறுவை மாநகர சபை

விளம்பர அறிவித்தல்கள் காட்சிப்படுத்தலுக்கான கட்டண அறவீடு - 2021

1989 ஆம் ஆண்டு சனவரி 20 ஆந் திகதிய இலக்கம் 541/17 அங்கீகரிக்கப்பட்ட இடைக்கால யாப்பின் XXXIX ஆம் பிரிவின் II ஆம் பகுதியில் குறிப்பிட்டுள்ள இடைக்கால யாப்பின் கீழ் பொலன்னறுவை மாநகர சபை அதிகார பிரதேசத்தினுள் விளம்பர அறிவித்தல்கள் காட்சிப்படுத்தலுக்காக கீழ்க்காணும் அடிப்படையில் கட்டணம் அறவிடப்படல் வேண்டும் என்ற ஒரு தீர்மானம் 2020, நவெம்பர் 11 ஆந் திகதி நடைபெற்ற பொலன்னறுவை மாநகர பொதுச் சபைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

மாநகர முதல்வர்,
பொலன்னறுவை மாநகர சபை,
பொலன்னறுவை.

மாநகர சபை அலுவலகம்,
பொலன்னறுவை,
2020, நவெம்பர் 11.

01. *ஒரு நிரந்தர பாரிய விளம்பர பலகைக்கு ஒரு வருட காலத்திற்கு சதுர அடி ஒன்றுக்கு ரூபா 150.00,*
02. *நிதி திரட்டுவதற்கான பதாகை/பெயர் பலகை ஒன்று, ஒரு மாதத்தைவிடக் கூடிய, 6 மாதத்திலும் குறைந்த காலத்திற்கு சதுர அடி ஒன்றுக்கு ரூபா 100.00 உம்,*
03. *வர்த்தக நிலையமொன்றின் அருகே காட்சிப்படுத்துகின்ற அவ்வர்த்தக நிலையத்திற்குரிய நிரந்தர விளம்பர பலகைக்காக ஒரு வருட காலத்திற்கு சதுர அடி ஒன்றுக்கு ரூபா 50.00*
04. *சுவரொன்றில் /கட்டுமானத்தில்/மதிலில் காட்சிப்படுத்துகின்ற அறிவித்தலுக்கு ஒரு வருட காலத்திற்கு சதுர அடி ஒன்றுக்கு ரூபா 150.00*
05. *தற்காலிக பதாகையொன்று/அறிவித்தல் பலகையொன்று ஒரு மாதத்திற்கு குறைவான கால எல்லைக்கு சதுர அடி ஒன்றுக்கு ரூபா 50.00*
06. *இலத்திரனியல் ஊடக காட்சிப்படுத்தப்படும் அறிவித்தல் ஒன்றுக்கு சதுர அடி ஒன்றுக்கு ரூபா 50.00*
07. *இலத்திரனியல் விளம்பர பலகை ஒன்றுக்கு ஒரு சதுர அடிக்கு ரூபா 150.00*
    இதற்கு புறம்பாக அரசாங்கக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.
08. *சந்தைப்படுத்தல் விளம்பர வேலைத் திட்டத்திற்கு ஒரு நாளைக்கு ரூபா 2000.00 கட்டணம் செலுத்தப்படல் வேண்டும்.*

12 - 255/14

பொலன்னறுவை மாநகர சபை

வரிப்பணம் விதிப்பனவு - 2021

252 ஆவது பிரிவான மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 230 ஆவது பிரிவு மற்றும் அதில் அடங்கியுள்ள இதர ஒழுங்கு விதிகளின் கீழ் பொலன்னறுவை மாநகர சபையின் அதிகார பிரதேசத்தினுள் அமைந்துள்ள அசையா சொத்துக்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய வரிப்பண வரி 2021 ஆம் ஆண்டிற்கு கீழ்க்காணும் விதத்தில் விதிப்பதற்கு 2020, நவெம்பர் 11 ஆந் திகதி நடைபெற்ற பொதுச் சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

மாநகர முதல்வர்,
பொலன்னறுவை மாநகர சபை,
பொலன்னறுவை.

மாநகர சபை அலுவலகம்,
பொலன்னறுவை,
2020, நவெம்பர் 11.

தீர்மானம்

01. பொலன்னறுவை மாநகர சபையினால் தீர்மானிக்க முடியுமான வரையறைகளின் கீழ் மாநகர சபையின் அதிகார பிரதேசத்தினுள் அமைந்திருக்கின்ற சகல வீடு சார்ந்த சொத்துக்களின் பெறுமதியில் 6% உம், அரசாங்க அல்லது வர்த்தக சொத்துக்களில் 7% உம் விதிப்பனவு செய்து அறவிடுவதற்கும்,

02. முறையே மார்ச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30, திசெம்பர் 31 ஆகிய தினங்களில் அல்லது அதற்கு முன்னர் இப்பணத்தை நான்கு காலாண்டு தவணைகளில் செலுத்துவதற்கும்,

03. 2021 ஆம் ஆண்டிற்கான குறிப்பிட்ட வரிப்பணம் அவ்வருடத்தில் சனவரி 31 ஆந் திகதிக்கு முன்னர் முழுத் தொகையையும் செலுத்தி முடிப்பதாயின் அவ்வரிப்பணத் தொகையில் நூற்றுக்கு பத்து வீதம் (10%) கழிவும், ஒவ்வொரு காலாண்டுக்குமுரிய குத்தகைப் பணத்தை அந்தந்த காலாண்டுகளின் முதல் மாதத்திற்குள் செலுத்தப்படுமானால் நூற்றுக்கு ஐந்து வீத (5%) கழிவும் பெற்றுக் கொள்ளக் கூடிய உரிமை கிடைக்கும் என்றும்,

04. வருடத்தில் திசெம்பர் 30 ஆந் திகதிக்கு பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்திற்காக வரித் தொகையில் (15%) தண்டப்பணம் அறவிடப்படும்.

12 - 255 / 15

பொலன்னறுவை மாநகர சபை

முச்சக்கர வண்டிகளை அல்லது கார்களை பதிவு செய்தல் - 2021

பொலன்னறுவை மாநகர சபை அதிகார பிரதேசத்தினுள் வர்த்தக நடவடிக்கைகளுக்காகவும் பிரயாணிகளின் போக்கு வரத்திற்காகவும் பயன்படுத்துகின்ற ஒவ்வொரு முச்சக்கர வண்டிக்கும் மற்றும் கார்களுக்கம் பொது வாகன நிறுத்துமிட ரூபா 500 கட்டணமாக அறவிடப்படல் வேண்டும் என்ற ஒரு தீர்மானம் 2020, நவெம்பர் 11 ஆந் திகதி நடைபெற்ற பொலன்னறுவை மாநகர சபைக் கூட்டத்தினால் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

மாநகர முதல்வர்,
பொலன்னறுவை மாநகர சபை,
பொலன்னறுவை.

மாநகர சபை அலுவலகம்,
பொலன்னறுவை,
2020, நவெம்பர் 11.

12 - 255 / 16

பொலன்னறுவை மாநகர சபை

தீயணைப்பு நடவடிக்கைகளுக்காக கட்டணம் அறவிடல் - 2021

பொலன்னறுவை மாநகர சபை அதிகார பிரதேசத்தினுள் மற்றும் வெளியே செய்யப்படும் சேவைகள், பாடநெறி, சான்றிதழ்கள் வழங்குதல் போன்ற நடவடிக்கைகளுக்காக 2021 ஆம் ஆண்டிற்காக கீழ்க்காணும் கட்டணங்களை அறவிடுவதற்கு 2020, நவெம்பர் 11 ஆந் திகதி நடைபெற்ற மாநகர சபைக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

மாநகர முதல்வர்,
பொலன்னறுவை மாநகர சபை,
பொலன்னறுவை.

மாநகர சபை அலுவலகம்,
பொலன்னறுவை,
2020, நவெம்பர் 11.

01. தீயணைப்பு மற்றும் மீட்பு பிரிவு மூலம் தொழிற்சாலைகள் அல்லது வணிக வளாகங்களுக்கான வருடாந்தம் நிறுத்தி வைக்கும் சேவைக் கட்டணம்

1.	வருடாந்தம் நிறுத்தி வைக்கும் வைப்புப் பணம்	ரூபா 20,000.00
2.	சோதனை சேவை கட்டணம் (ஒப்பந்தத்தில் நுழைவதற்கு முன்) (சோதனை நடவடிக்கைகளுக்காக போக்குவரத்து வசதி செய்து தரப்பட வேண்டும்)	1500.00
3.	ஆலோசனை சேவை கட்டணம் (ஒப்பந்தத்தில் நுழைவதற்கு முன்)	ரூபா 2000.00
4.	தீ ஏற்பட்டால் அதற்காக	ரூபா 12,500.00

02. தீயணைப்பு மற்றும் மீட்பு பிரிவு மூலம் அரசாங்கம் மற்றும் தனியார் நிறுவனங்களுக்காக நடத்தப்படும் பயிற்சி பாட நெறிக்கான கட்டணம்

		தனியார் துறை	அரசாங்கம் துறை
		ரூ. ச.	ரூ.ச.
1.	சேவைக் கட்டணம்	10,000.00	2,000.00
2.	விரிவுரை மற்றும் நடைமுறை பயிற்சி கட்டணம் (ஒரு மணித்தியாலயத்திற்கு ரூபா 250.00 படி 8 மணித்தியாலயத்திற்கு)	2000.00	500.00
3.	நடைமுறை பயிற்சி கட்டணம் (02 அதிகாரிகளுக்காக) (இதற்காக போக்குவரத்து வசதிகள் பெறுவதாயின் கெப் வண்டிக்காக 01 கி. மீ. இக்கு ரூபா 35.00 அறவிடப்படும்	2800.00	500.00

03 பாடசாலை, அறிவியல் பீடம் மற்றும் தொழில்நுட்ப கல்லூரிகள் போன்ற நிறுவனங்களுக்ககா இலவசமாக பயிற்சி நடைபெறும்

04. சுற்றுலா விடுதிகள், விருந்தினர் வீடுகள், தொழிற்சாலைகள் மற்றும் வியாபாரத்திற்காக தீ தடுப்பு சான்றிதழ்களை வழங்குதல்

1.	தீ தடுப்பு சான்றிதழுக்காக	ரூபா 5000.00
2.	சோதனை சேவைக் கட்டணம்	ரூபா 1500.00
3.	ஆலோசனை சேவைக் கட்டணம் (இதற்காக போக்குவரத்து வசதிகள் பெறுவதாயின் கெப் வண்டிக்காக 01 கி. மீக்கு ரூபா 35.00 அறவிடப்படும்)	ரூபா 1500.00

05. தீயணைப்பு மற்றும் மீட்பு பணிக்கான கட்டணம். (ஒரு தனிநபர் அல்லது ஒரு நிறுவனம் காப்பீட்டு சலுகைகளைப் பெற்றால் அதற்காக கட்டணம் அறவிடப்படல் வேண்டும்.)

1.	சேவைக் கட்டணம் தீயணைப்பு வண்டி சேவைகளை வழங்குதல் நீர் தொட்டியுடனான ஒரு தீயணைப்பு வண்டி கெப் வண்டிக்காக 01 கி. மீ. இற்கு ரூபா 35.00 படி	ரூபா 5000.00
2.	ஒரு தீயணைப்பு வீரருக்கு, ஒரு இயந்திர தீயணைப்பு வீரருக்கு அல்லது பொறுப்பான அதிகாரிக்கு (12 மணித்தியாலயத்திற்கு அல்லது அதன் ஒரு பகுதிக்கு)	ரூபா 1000.00
3.	இடத்திற்கு பொறுப்பான அதிகாரிக்கு (12 மணித்தியாலயத்திற்கு அல்லது அதன் ஒரு பகுதிக்கு)	ரூபா 1500.00

06. பல்வேறு திருவிழாக்கள் பண்டிகைகள் மோட்டார் வாகன பந்தயம் மற்றும் படப்பிடிப்பிற்காக தீ பாதுகாப்பு வழங்குவதற்கான கட்டணம்

1.	தீ அணைப்பு வண்டி சேவைகளை வழங்குதல் - நீர் தொட்டியுடனான ஒரு தீயணைப்பு வண்டி, (24 மணித்தியாலத்திக்கு அல்லது அதன் ஒரு பகுதிக்கு)	ரூபா 7000.00
2.	ஒரு தீயணைப்பு வீரருக்கு, ஒரு இயந்திர தீயணைப்பு வீரருக்கு அல்லது பொறுப்பான அதிகாரிக்கு (12 மணித்தியாலத்திற்கு அல்லது அதன் ஒரு பகுதிக்கு)	ரூபா 750.00
3.	இடத்திற்கு பொறுப்பான அதிகாரிக்கு (24 மணித்தியாலத்திற்கு அல்லது அதன் ஒரு பகுதிக்கு)	ரூபா 1000.00
4.	போக்குவரத்து வசதிகளுக்ககா 01 கி. மீ. இற்கு ரூபா 65.00 கட்டணமாக அறவிடப்படும்.	

07. சுற்றுலா விடுதிகள், விருந்தினர் வீடுகள், தொழிற்சாலைகள் மற்றும் வியாபாரத்திற்காக அவசர நீக்க பயிற்சி பாடநெறிக் கட்டணம்

1. அவசர நீக்க பயிற்சி சான்றிதழுக்கு ரூபா3000.00
2. போக்குவரத்து வசதி
(போக்குவரத்து வசதிகள் பெறுவதாயின் கெப் பண்டிக்காக 01 கி. மீ. இற்கு ரூபா 35.00 அறவிடப்படும்)
3. நடைமுறை பயிற்சி மற்றும் விரிவுரை கட்டணம் ரூபா 1000.00
(விரிவுரை கட்டணம் சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு சொந்தமாகும்)

08. வாடகை அடிப்படையில் அம்பியுலன்ஸ் சேவையை வழங்குதல்

1. போக்குவரத்து கட்டணம் - மாநகர சபை அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தினுள் மற்றும் வேளியே 100 கி. மீ. உள்ளே சேவை வழங்குவதற்காக 01 கி. மீ. இற்கு ரூபா 40.00 படி அறவிடப்படும். (இதற்காக பணியாளர்கள் கட்டணம் அறவிடப்படாததுடன் சேவை வழங்கும் போது 06 மணித்தியாலயத்திற்கு அதிகமான நேரம் எடுக்குமானால் ஊழியர்களின் கொடுப்பனவு ரூபா 2000.00 அறவிடப்பட வேண்டும்.)
2. போக்குவரத்து கட்டணம் - மாநகர சபை அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தினுள் மற்றும் வேளியே 100 கி. மீ. அதிகப்படியான சந்தர்ப்பங்களில் சேவை வழங்குவதற்காக 01 கி. மீ. இற்கு ரூபா 40.00 படி அறவிடப்படும். (இதற்காக தீயணைப்பு வீரர் மற்றும் மருத்துவ உதவியாளருக்காக 24 மணித்தியாலயத்திற்கு அல்லது அதன் ஒரு பகுதிக்கு ஊழியர்களின் கொடுப்பனவு ரூபா 2000.00 அறவிடப்பட வேண்டும்.)

குறிப்பு .- அம்பியுலன்ஸ் பொலன்னறுவை மாநகர சபை அதிகாரியின் அவசர தேவைக்கு பயன்படுத்தினால் கட்டணத்தில் 65 % மட்டுமே அறவிடப்படும். (இதற்காக அதிகாரி, அவருடைய தந்தை, அவருடைய தாய், துணைவரின் தந்தை, துணைவரின் தாய், திருமணமாகாத பிள்ளைகளும் உள்ளடங்குவர்).

12-255/17

பொலன்னறுவை மாநகர சபை

தீபஉயன மற்றும் சிறுவர் பூங்காவிற்கான கட்டணம் அறவிடல் - 2021

பொலன்னறுவை மாநகர சபைக்கு சொந்தமான தீப உயன மற்றும் சிறுவர் பூங்காவிற்காக 2021 ஆண்டிற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கட்டணம் விதிப்பதற்கு பொலன்னறுவை மாநகர சபையால் 2020, நவெம்பர் 11 ஆந் திகதி நடைபெற்ற மாநகர சபைக் கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

மாநகர முதல்வர்,
பொலன்னறுவை மாநகர சபை,
பொலன்னறுவை.

மாநகர சபை அலுவலகம்,
பொலன்னறுவை,
2020, நவெம்பர் 11.

அட்டவணை

	ரூபா ச.
01 தீப உயன பார்வையிடல் (ஒரு தனி நபருக்காக)	30.00
02. தீப உயன திருமண புகைப்படம் எடுத்தலுக்காக	2000.00
03. தீப உயன பிறந்த நாள் கொண்டாட்டங்களுக்கு	1000.00
04. சிறுவர் பூங்கா - வைத்தியசாலை சந்தி (பெரியவர்களுக்காக)	30.00
05. பொலன்னறுவை சீடி சென்டர் கட்டடத்தில் திருமண புகைப்படம் எடுத்தலுக்காக	1500.00

12- 255/18

பொலன்னறுவை மாநகர சபை

சுற்றுலா வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட உணவகங்கள் மற்றும் தங்குமிடங்களுக்காக வரி அறவிடல் - 2021

252 (அ) 1, 2 பிரிவின் படி மற்றும் 1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சுற்றுலா மேம்பாட்டு சட்டத்தின் படி பொலன்னறுவை மாநகர சபைக்குரிய இலங்கை சுற்றுலா வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட உணவகங்கள் மற்றும் தங்குமிடங்களுக்கான வருடாந்த வருமானத்தில் 2020 ஆம் ஆண்டிற்கான வருவாயின் அடிப்படையில் 1% வரி 2021 ஆம் ஆண்டு மார்ச்சு 31 ஆந் திகதிக்கு முன்னர் அறவிடுவதற்காக 2020, நவெம்பர் 11 ஆந் திகதி நடைபெற்ற பொலன்னறுவை மாநகர சபைக் கூட்டத்தினால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

மாநகர முதல்வர்,
பொலன்னறுவை மாநகர சபை,
பொலன்னறுவை.

மாநகர சபை அலுவலகம்,
பொலன்னறுவை,
2020, நவெம்பர் 11.

12- 255/19

மாத்தளை பிரதேச சபை

மதிப்பீட்டு வரி விதித்தல் -2021

மாத்தளை பிரதேச சபை 2020, நவெம்பர் மாதம் 05 ஆந் திகதி நடத்திய அதன் பொதுச்சபைக் கூட்டத்தில் பின்வரும் 5.3.1 ஆம் இலக்கம் கொண்ட கீழே தரப்பட்டுள்ள முன்மொழிவு நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் பொதுமக்களுக்கு அறியத் தரப்படுகின்றது.

2021 ஆம் வருடத்துக்கென விதிக்கப்படும் குறித்த மதிப்பீட்டு வரியை மார்ச்சு 31, யூன் 30, செப்தெம்பர் 30 மற்றும் திசெம்பர் 31 ஆகிய திகதிகளுடன் முடிவடையும் ஒவ்வொரு காலாண்டுக்குள் நான்கு சமமான தவணைகளில் பிரதேச சபை அலுவலகத்தில் செலுத்துதல் வேண்டுமென மேலும் அறிவிக்கப்படுகின்றது.

2021 ஆம் வருடத்துக்குரிய மதிப்பீட்டு வரி முழுவதையும் 2021 சனவரி மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் பிரதேச சபை அலுவலகத்தில் செலுத்தினால் மதிப்பீட்டு வரியின் முழுப் பெறுமதியின் பத்து சதவீதம் (10%) கழிவாகவும், ஒவ்வொரு காலாண்டுக்குமான உரிய மதிப்பீட்டு வரியைக் குறித்த காலாண்டின் முதலாவது மாதத்தின் கடைசித் திகதிக்கு முன்னர் பிரதேச சபையில் செலுத்தினால் நூற்றுக்கு ஐந்து (5%) சதவீதம் கழிவாகவும் வழங்கப்படும்.

யூ. எச். எம். கபில பண்டார ஹேன்தெனிய,
தவிசாளர்,
மாத்தளை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
மாத்தளை,
2020, நவெம்பர் 12.

தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 146 ஆவது பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் மாத்தளை பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் கீழே விபரிக்கப்பட்டுள்ள ஆதனங்களில் அமைந்துள்ள எல்லா வீடுகளினதும், கட்டடங்களினதும், காணிகளினதும், வீட்டுத் தொடர்களினதும் 2020 ஆம் ஆண்டின் வருடாந்த மதிப்பீட்டுத் தொகையை 2021 ஆம் ஆண்டின் பெறுமதியாக ஏற்றுக்கொள்வதற்கும்.

குறித்த பிரதேச சபைகள் சட்டத்தின் 134 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமையக் குறித்த பெறுமதியின்,

01. பலாபத்வெல நகரின் மாத்தளை வீதி கமநல சேவைகள் திணைக்களத்தின் அருகில் வாவனாவத்தைக்குத் திரும்பும் சந்தி அருகிலுள்ள மதகிலிருந்து மாத்தளை வீதி 34/2 ஆம் இலக்கப் பாலம் வரை, மற்றும், பலாபத்வெல நகரின் மணிக்கூட்டுக் கோபுரம் அருகிலிருந்து கலேவெல வீதியில் 1/3 ஆம் இலக்க மதகு வரை மாத்தளை தம்புள்ள பிரதான வீதியில் (ஏ 9 வீதி) கலேவெல பிரதான வீதியின் நடு அச்சிலிருந்து இருபுறங்களிலும் 200 யார் வீதமான பிரதேசங்களிலிலிருந்து நூற்றுக்கு ஏழு (7%) வீத மதிப்பீட்டு வரியையும்,

02. பலாபத்வெல நகரின் மாத்தளை வீதி கமநல சேவைகள் திணைக்களத்தின் அருகில் வாவனாவத்தைக்குத் திரும்பும் சந்தி அருகிலுள்ள மதகிலிருந்து தொட்டகமுவ வயல்வெளி அருகில் மாத்தளை வீதி 30/7 ஆம் இலக்கப் பாலம் வரை மாத்தளை தம்புள்ள பிரதான வீதியில் (ஏ 9 வீதி) நடு அச்சிலிருந்து இருபுறங்களிலும் 200 யார் வீதமான பிரதேசங்களிலிருந்து நூற்றுக்கு நான்கு (4%) வீத மதிப்பீட்டு வரியையும்,

03. வள்ளிவெல இலக்கம் 31/1 இலக்கப் பாலத்திலிருந்து கவுடுபெளல்ல கிராமிய வங்கி அருகிலுள்ள மதகு வரை மாத்தளை தம்புள்ள பிரதான வீதியின் (ஏ 9 வீதி) நடு அச்சிலிருந்து இரு புறங்களிலும் 200 யார் வீதமான பிரதேசங்களிலிருந்து நூற்றுக்கு நான்கு (4%) சதவீத மதிப்பீட்டு வரியையும்,

04. மடவள உள்பத்த இலக்கம் 43/1 ஆம் மதகிலிருந்து நாலந்த தொழிற்புறத்துக்குப் போவதற்குள்ள முதலாவது பாதை வரை மாத்தளை தம்புள்ள பிரதான வீதியின் (ஏ 9 வீதியின்) நடு அச்சிலிருந்து இருபுறங்களிலும் 200 யார் வீதமான பிரதேசங்களிலிருந்து நூற்றுக்கு நான்கு (4%) சதவீத மதிப்பீட்டு வரியையும்,
2021 ஆம் ஆண்டுக்கென விதித்து அறவிடுவதற்கும்,

குறித்த பிரதேச சபையின் சட்டத்தின் 134 ஆவது பிரிவின் (6) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, குறித்த வருடாந்த மதிப்பீட்டு வரியை குறித்த வருடத்தின் மார்ச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30 மற்றும் திசெம்பர் 31 ஆகிய திகதிகளுடன் முடிவடையும் ஒவ்வொரு காலண்டுக்குள் சமமான தவணைகளில் பிரதேச சபை அலுவலகத்தில் செலுத்துதல் வேண்டுமென விதிக்கவும் மாத்தளை பிரதேச சபை தீர்மானித்துள்ளது.

12 - 257/1

மாத்தளை பிரதேச சபை

பயிர்ச்செய்கை வரி விதித்தல் -2021

மாத்தளை பிரதேச சபை 2020, நவெம்பர் மாதம் 05 ஆந் திகதி நடத்திய அதன் பொதுச்சபைக் கூட்டத்தில் பின்வரும் 5.3.2 ஆம் இலக்கம் கொண்ட கீழே தரப்பட்டுள்ள முன்மொழிவு நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் பொதுமக்களுக்கு அறியத் தரப்படுகின்றது.

2021 ஆம் வருடத்துக்கென விதிக்கப்படும் குறித்த பயிர்ச்செய்கை வரியை மார்ச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30 மற்றும் திசெம்பர் 31 ஆகிய திகதிகளுடன் முடிவடையும் ஒவ்வொரு காலாண்டுக்குள் நான்கு சமமான தவணைகளில் பிரதேச சபை அலுவலகத்தில் செலுத்துதல் வேண்டுமென மேலும் அறிவிக்கப்படுகின்றது.

2021 ஆம் வருடத்துக்குரிய பயிர்ச்செய்கை வரி முழுவதையும் 2021 சனவரி மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் பிரதேச சபை அலுவலகத்தில் செலுத்தினால் மதிப்பீட்டு வரியின் முழுப் பெறுமதியின் பத்து சதவீதம் (10%) கழிவாகவும், ஒவ்வொரு காலாண்டுக்குமான உரிய மதிப்பீட்டு வரியைக் குறித்த காலாண்டின் முதலாவது மாதத்தின் கடைசித் திகதிக்கு முன்னர் பிரதேச சபையில் செலுத்தினால் நூற்றுக்கு ஐந்து (5%) சதவீதம் கழிவாகவும் வழங்கப்படும்.

யூ. எச். எம். கபில பண்டார ஹேன்தெனிய,
தவிசாளர்,
மாத்தளை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
மாத்தளை,
2020, நவெம்பர் 11.

தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 146 (1) ஆவது உப பிரிவின் கீழ் பிரதேச சபைகளுக்கு வழங்கப் பட்டுள்ள அதிகாரங்களின்படி 2020 ஆம் ஆண்டு செயலில் இருந்த கணிப்பீட்டை 2021 ஆண்டுக்கென ஏற்றுக் கொள்வதெனவும்,

குறித்த சட்டத்தின் 134 ஆவது பிரிவின் (3) ஆவது உப பிரிவின் கீழ் பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி மாத்தளை பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் அமைந்துள்ள மேற்குறித்த சட்டத்தின் 135 ஆவது பிரிவின் கீழ் பயிர்ச்செய்கை வரியிலிருந்து விலக்களிக்கப்படாததும் நிரந்தர அல்லது முறையான பயிர்ச்செய்கைக்கு உட்பட்டுள்ள,

ஐந்து ஹெக்டயார் அல்லது அதற்கு மேலுள்ள ஒவ்வொரு காணிக்கும் எனக் குறித்த காணியின் ஒவ்வொரு ஹெக்டயார் மீதும் ரூ. 10.00 வீதம் 2021 ஆம் ஆண்டுக்கான பயிர்ச்செய்கை வரியையும் விதித்து அறவிடுவதற்கும்,

(இ) 134 ஆவது பிரிவின் (6) ஆவது உப பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி குறித்த வரிக்கு உட்படுபவர் அதனை 2021 ஆம் ஆண்டின் மார்ச 31, யூன் 30, செப்தெம்பர் 30, மற்றும் திசெம்பர் 31 ஆகிய திகதிகளுடன் முடிவடையும் 04 சமமான தவணைக் கட்டணங்களில் செலுத்துவதற்கு விதித்தல் வேண்டுமெனவும் மாத்தளை பிரதேச சபை தீர்மானித்துள்ளது.

12 - 257/2

மாத்தளை பிரதேச சபை

ஏதும் துணை விதிகளின்கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரங்கள் மீது
கட்டணங்கள் விதித்தல் -2021

மாத்தளை பிரதேச சபை 2020, நவெம்பர் மாதம் 05 ஆந் திகதி நடத்திய அதன் பொதுச்சபைக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் 5.3.3 ஆம் இலக்கம் கொண்ட கீழே தரப்பட்டுள்ள முன்மொழிவு நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் பொதுமக்களுக்கு அறியத் தரப்படுகின்றது.

இதற்கமைய ஏதும் துணைவிதிகளின் கீழ் மாத்தளை பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் ஏதும் தொழில்களை நடத்திச் செல்வதற்கென 2021 ஆம் வருடத்தில் மாத்தளை பிரதேச சபை வழங்கும் ஒவ்வொரு அனுமதிப்பத்திரத்தின் மீதும் கட்டணமொன்று அறவிடப்படும் என்பது இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

யூ. எச். எம். கபில பண்டார ஹேன்தெனிய,
தவிசாளர்,
மாத்தளை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
மாத்தளை,
2020, நவெம்பர் 12.

தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஏதும் துணை விதிகளின் கீழ் அல்லது மாத்தளை பிரதேச சபை ஏற்றுக்கொண்ட ஏதும் துணை விதிகளின் கீழ் மாத்தளை பிரதேச சபை 2021 ஆம் ஆண்டுக்கென வழங்கும் அனுமதிப்பத்திரங்கள் தொடர்பில் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 147 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கக்கூடிய 149 ஆவது பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி மாத்தளை பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் நடாத்தப்படும் பின்வரும் அட்டவணையின் I ஆவது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதும் தொழில் முயற்சிகள் தொடர்பில் அதனை நடத்திச் செல்லும் இடத்தின் வருடாந்தப் பெறுமதியின் நிரல் II இல் காட்டப்பட்டுள்ளதன் அடிப்படையில் 2021 ஆம் வருடத்துக்கான அனுமதிப்பத்திரக் கட்டணத்தை விதித்து அறவிடுவதெனவும்.

குறித்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வர்த்தகம் இலங்கைச் சுற்றுலா சபையில் பதிவு செய்யப்பட்ட அல்லது அதன் மூலம் அங்கீகரிக்கப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஹோட்டல், தங்குமிட வசதி கொண்ட ஹோட்டல் அல்லது தங்குமிடமாக இருப்பின் அவ்வாறான ஹோட்டல், தங்குமிட வசதி கொண்ட ஹோட்டல் அல்லது தங்குமிடத்தின் முன்னைய ஆண்டின் பெறுகைகளின் ஒரு சதவீத (1%) தொகையை 2021 ஆம் ஆண்டுக்கான அனுமதிப்பத்திரக் கட்டணமாக விதித்து அறவிடுவதெனவும் மாத்தளை பிரதேச சபை முன்மொழிகின்றது.

அட்டவணை

நிரல் I	நிரல் II		
கைத்தொழிலின் தன்மை	இடத்தின் வருடாந்தப் பெறுமதி		
	750 ரூபாவிற்கு மேற்படாத விடத்து	750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத விடத்து	1,500 ரூபாவிற்கு மேற்படும் இடத்து
	ரூபா ச.	ரூபா ச.	ரூபா ச.
1. தங்குமிடம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
2. ஹோட்டல் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
3. சோற்றுக்கடை, சாப்பட்டுக்கடை மற்றும் தேநீர்க்கடை, கோப்பிக்கடை நடாத்துதல்	500.00	750.00	1,000.00
4. பேக்கரி நடாத்துதல்	500.00	750.00	1,000.00
5. பாற்பண்ணை அல்லது பால் வர்த்தகம்	500.00	750.00	1,000.00
6. மீன் விற்பனை	500.00	750.00	1,000.00
7. இறைச்சி விற்பனை	500.00	750.00	1,000.00
8. ஐஸ் தொழிற்சாலை	500.00	750.00	1,000.00
9. மென்பானத் தயாரிப்பு நிலையம்	500.00	750.00	1,000.00
10. சலவையகம்	500.00	750.00	1,000.00
11. மாட்டுக் கொட்டில்	500.00	750.00	1,000.00
12. கால்நடை அறுவை நிலையம்	500.00	750.00	1,000.00
13. சிகையலங்கார நிலையம் அழகுக்கலை நிலையம்	500.00	750.00	1,000.00
அருவருப்பான வர்த்தகங்கள்			
1. பசளை அல்லது இரசாயனப் பசளை தயாரிப்பு அல்லது அல்லது களஞ்சியம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
2. தோல் பதனிடும் நிலையம்/தோல் விற்பனை	500.00	750.00	1,000.00
3. விலங்கு வளர்ப்பு (இறைச்சி, பால் அல்லது முட்டைக்காக)	500.00	750.00	1,000.00
4. புகைப்படக் கலையகம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
5. மிருக வைத்திய நிலையம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
6. விற்பனைக்கென இலகுவில் பழுதடையக்கூடிய உணவுகளையும் உணவுப் பொருட்களையும் களஞ்சியம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
7. 150 கிலோ கிராமுக்கும் அதிகமாகக் கருவாடு, உப்புமீன், ஜாடி வைத்திருத்தல்	500.00	750.00	1,000.00
8. சிரட்டைக்கரி அல்லது மரக்கரி தயாரிப்பு மற்றும் களஞ்சியம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
9. புகையிலை பதனிடும் அல்லது களஞ்சியம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
10. மிருக உணவுகள் தயாரிப்பு அல்லது மிருக உணவுக் களஞ்சியம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
11. புண்ணாக்கு உற்பத்தி அல்லது 200 கிலோகிராமுக்கும் அதிகமாகக் களஞ்சியம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
12. சவர்க்கார உற்பத்தி	500.00	750.00	1,000.00
13. மிருக எலும்புகளை அரைத்தல் அல்லது களஞ்சியம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
14. புதிய அல்லது பழைய உலோகங்கள் களஞ்சியம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
15. உலோகத் துகள்களது களஞ்சியம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
16. வீட்டுத் தளபாடத் தயாரிப்பு அல்லது களஞ்சியம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
17. பிரம்புப் பொருட்களது தயாரிப்பு நடாத்துதல்	500.00	750.00	1,000.00
18. தச்சுத் தொழிற்சாலை நடாத்துதல்	500.00	750.00	1,000.00
19. பழப்பாகு அல்லது பழரசப் பானம் தயாரித்தல்	500.00	750.00	1,000.00
20. இனிப்புப் பண்டங்களது தயாரிப்பு	500.00	750.00	1,000.00

அட்டவணை - *(தொடர்ச்சி)*

	நிரல் I	*நிரல் II*		
	கைத்தொழிலின் தன்மை	*இடத்தின் வருடாந்தப் பெறுமதி*		
		750 ரூபாவிற்கு மேற்படாத விடத்து	*750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத விடத்து*	*1,500 ரூபாவிற்கு மேற்படும் இடத்து*
		ரூபா ச.	*ரூபா ச.*	*ரூபா ச.*
21.	தேங்காய் மட்டை அவிய வைத்தல்	500.00	750.00	1,000.00
22.	தூரிகை வகைகளது தயாரிப்பு (பற்தூரிகை தவிர்ந்த)	500.00	750.00	1,000.00
23.	பற்தூரிகை தயாரிப்பு	500.00	750.00	1,000.00
24.	கள் சேகரித்தல்	500.00	750.00	1,000.00
25.	வினாகிரி தயாரித்தல் அல்லது களஞ்சியம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
26.	பொறிமுறையினால் அல்லது கையினால் மரம் அரியும் நிலையம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
27.	100 லீற்றருக்கு அதிகமாகப் பெயின்ட், வார்ணிஷ் அல்லது டிஸ்டெம்பர் களஞ்சியம்	500.00	750.00	1,000.00
28.	சோடா உற்பத்தி	500.00	750.00	1,000.00
29.	தோல் பொருட்கள் தயாரிப்பு	500.00	750.00	1,000.00
30.	பழவகை, மீன் அல்லது ஏனைய உணவுவகைகளைத் தகரத்தில் அடைத்தல்	500.00	750.00	1,000.00
31.	மிளகாய், கோப்பி, தானியங்கள், அவரையினம் அல்லது கறிச்சரக்குப் பொருட்கள் அல்லது மா அரைக்கும் ஆலை நடாத்துதல்	500.00	750.00	1,000.00
32.	மெழுகுதிரி தயாரிப்பு	500.00	750.00	1,000.00
33.	கற்பூர உற்பத்தி	500.00	750.00	1,000.00
34.	எழுத்துமை, அச்சுமை அல்லது ஸ்ரென்சில் மை தயாரித்தல்	500.00	750.00	1,000.00
35.	ஆடை துவைக்கும் நீலத் தயாரிப்பு	500.00	750.00	1,000.00
36.	அரக்கு உற்பத்தி	500.00	750.00	1,000.00
37.	வாசனைப் பொருட்களது தயாரிப்பு அல்லது களஞ்சியம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
38.	பாடசாலை வெண்கட்டி தயாரிப்பு	500.00	750.00	1,000.00
39.	50 இற்கு மேற்பட்ட டயர், ரியூப் களஞ்சியம் செய்தல்	500.00	750.00	1,000.00
40.	டயர் மீள நிரப்புதல்	500.00	750.00	1,000.00
41.	டயர், டியூப் வொல்கனைசுப்படுத்தும் நிலையம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
42.	1000 கிலோகிராமுக்கு அதிகமான சீமெந்துக் களஞ்சியம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
43.	சீமெந்துப் பொருட்கள் அல்லது அஸ்பெஸ்டோ சீமெந்துப் பொருட்கள் உற்பத்தி	500.00	750.00	1,000.00
44.	பிளாத்திக் பொருட்கள் உற்பத்தி	500.00	750.00	1,000.00
45.	பொறிமுறை நெசவு நிலையம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
46.	பசளை, சுண்ணாம்பு, மா அல்லது ஏனைய பொருட்கள் இடப்பட்ட பைகளைச் சுத்தப்படுத்தி விற்பனை செய்தல்	500.00	750.00	1,000.00
47.	பொறிமுறையிலான சீமெந்து அச்சுக்கல் தயாரித்தல்	500.00	750.00	1,000.00
48.	250 கிலோகிராமுக்கு அதிகமான தானியங்கள் அல்லது அவரையினக் களஞ்சியம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
49.	பீடி தயாரிப்பு நிலையம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
50.	சந்தனக்கூர் தயாரிப்பு	500.00	750.00	1,000.00
51.	நீச்சல் தடாகத் தொகுதி	500.00	750.00	1,000.00
52.	முறுக்கு வகைகள் தயாரிக்கும் நிலையம்	500.00	750.00	1,000.00
53.	தானியம் மற்றும் கறிச்சரக்குகள் பொதி செய்தல்	500.00	750.00	1,000.00
54.	அரிசி ஆலை	500.00	750.00	1,000.00
55.	டயர் தயாரிப்பு நிலையம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00

அட்டவணை - *(தொடர்ச்சி)*

	நிரல் I	நிரல் II		
	கைத்தொழிலின் தன்மை	இடத்தின் வருடாந்தப் பெறுமதி		
		750 ரூபாவிற்கு மேற்படாத விடத்து	750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத விடத்து	1,500 ரூபா விற்கு மேற்படும் இடத்து
		ரூபா ச.	ரூபா ச.	ரூபா ச.
56.	கோழியிறைச்சி, மீன் கலந்த உணவுவகைகள் தயாரிப்பு	500.00	750.00	1,000.00
57.	தானியவகை அரைக்கும் நிலையம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
58.	பொறிமுறைத் தேங்காயெண்ணெய் வடிக்கும் நிலையம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
59.	பசும் பால் விற்பனை நிலையம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
60.	ஒட்டும் பசை தயாரிப்பு நிலையம்	500.00	750.00	1,000.00
61.	விலங்குணவுகள் விற்பனை நிலையம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
62.	இரும்பு அல்லது உருக்குப் பொருட்கள் தயாரிக்கும் நிலையம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
63.	படமாளிகை நடாத்துதல்	500.00	750.00	1,000.00
64.	களியாட்டக் களரி நடாத்துதல்	500.00	750.00	1,000.00
65.	பலகை தயாரிப்பு அல்லது பதனிடும் நிலையம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
	அபாயகரமான வர்த்தகங்கள்			
1.	மொத்த விற்பனைக்காக 750 கிலோகிராமுக்கு அதிகமாக மா, வெங்காயம் அல்லது சீனி களஞ்சியம் செய்து வைத்திருத்தல்	500.00	750.00	1,000.00
2.	அச்சகம் ஒன்றை நடாத்துதல்	500.00	750.00	1,000.00
3.	50 பறவைகளுக்கு அதிகமான கோழிப் பண்ணை அல்லது கோழிக் கொட்டில் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
4.	10 விலங்குகளுக்கும் அதிகமான ஆடுகள், பன்றிகள் பண்ணை நடாத்துதல்	500.00	750.00	1,000.00
5.	செங்கல் அல்லது ஓட்டுக் களஞ்சியம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
6.	விறகுக் களஞ்சியம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
7.	பொறிமுறையில் அல்லது கையினால் கருங்கல் உடைத்தல்	500.00	750.00	1,000.00
8.	குளிர்பான உற்பத்தி 100 போத்தல்களுக்கு அதிகமான களஞ்சியம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
9.	ஐஸ்கிறீம் தயாரிப்பு	500.00	750.00	1,000.00
10.	தேங்காயெண்ணெய் தயாரித்தல் அல்லது 300 லீற்றருக்கும் அதிகமான களஞ்சியம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
11.	தீப்பெட்டி உற்பத்தி அல்லது 100 டசினுக்கும் அதிகமாக களஞ்சியம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
12.	தும்பு அல்லது ஏனைய நார் வகைகளால் பொருட்கள் தயாரிப்பு மற்றும் களஞ்சியம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
13.	பாவித்த ஆடைகளின் களஞ்சியம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
14.	தங்கநகை தயாரிப்பு அல்லது திருத்தவேலை செய்தல்	500.00	750.00	1,000.00
15.	பொறிமுறையில் மரம் அரிதல்	500.00	750.00	1,000.00
16.	இயந்திரங்களைப் பயன்படுத்தும் பட்டறை நடாத்துதல்	500.00	750.00	1,000.00
17.	வெற்றுப் போத்தல், வெற்றுச் சாக்கு களஞ்சியம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
18.	மிதிவண்டி அல்லது மோட்டார் சைக்கிள் திருத்துமிடம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
19.	பாவித்த பேப்பர் அல்லது கடதாசிக் களஞ்சியம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
20.	விசிறல் பெயின்ட் செய்யுமிடம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00

அட்டவணை - *(தொடர்ச்சி)*

	நிரல் I	நிரல் II		
	கைத்தொழிலின் தன்மை	இடத்தின் வருடாந்தப் பெறுமதி		
		750 ரூபாவிற்கு மேற்படாத விடத்து	750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத விடத்து	1,500 ரூபாவிற்கு மேற்படும் இடத்து
		ரூபா ச.	ரூபா ச.	ரூபா ச.
21.	வாணவேடிக்கை அல்லது பட்டாசு தயாரிப்பு அல்லது களஞ்சியம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
22.	தேங்காயெண்ணெய் தவிர்ந்த ஏனைய எண்ணெய் வகைகள் 50 லீற்றருக்கு அதிகம் களஞ்சியம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
23.	குளிரூட்டிய இறைச்சி அல்லது மீன் களஞ்சியம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
24.	அரிமரக் களஞ்சியம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
25.	சுண்ணக்கல் குழி நடாத்துதல்	500.00	750.00	1,000.00
26.	பெல்ஸ்பார் கற்குழி நடாத்துதல்	500.00	750.00	1,000.00
27.	உப்பு பொதி செய்து விற்பனை செய்தல்	500.00	750.00	1,000.00
28.	யோகற் தயாரிப்பு நிலையம்	500.00	750.00	1,000.00
29.	ஐஸ் பைக்கற் செய்து விற்கும் நிலையம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
30.	தேயிலை பொதியிட்டு விற்பனை செய்தல்	500.00	750.00	1,000.00
31.	பொறிமுறை மெட்டல் உடைக்கும் நிலையம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
32.	மொத்த விற்பனையும் களஞ்சியமும் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
33.	வெற்றுப் போத்தல், கோணிப்பை களஞ்சியமும் விற்பனையும் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
34.	உலோகக் கழிவுகளது களஞ்சியம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
35.	பொறிமுறையல்லாத பட்டறை நடாத்துதல்	500.00	750.00	1,000.00
36.	பழைய பேப்பர், தாள்கள் களஞ்சியம் செய்து விற்பனை செய்தல்	500.00	750.00	1,000.00
37.	தும்பு நார் வகைகள் தயாரிப்பு நிலையம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
38.	நூடுல்ஸ், பப்படம் தயாரித்து விற்பனை செய்யும் நிலையம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
39.	ஊறுகாய் தயாரித்து விற்பனை செய்தல்	500.00	750.00	1,000.00
40.	காய்கறி, பழவகை உலர்த்தி விற்பனை	500.00	750.00	1,000.00
41.	காளான் உற்பத்தி செய்தல்	500.00	750.00	1,000.00
	அருவருப்பான மற்றும் அபாயகரமான வர்த்தகங்கள்			
1.	இரசாயனம் பயன்படுத்தி ஏலம், கறுவா, கராம்பு களஞ்சியம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
2.	உலர்சலவை அல்லது சாயமிடுதல்	500.00	750.00	1,000.00
3.	சீலை அச்சிடுதல் அல்லது சாயமிடுதல்	500.00	750.00	1,000.00
4.	உலோக முலாம் பூசும் நிலையம்	500.00	750.00	1,000.00
5.	சுண்ணக்கல், கிரவல் சுடுதல் அல்லது பதனிடுதல் அல்லது தூள் சுண்ணம் களஞ்சியம் செய்தல்	500.00	750.00	1,000.00
6.	பற்றரி மின்னேற்றம் செய்தல் திருத்தும் நிலையம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
7.	மோட்டார் வாகனம் திருத்தும் நிலையம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
8.	மோட்டார் வாகன சேர்விஸ் நிலையம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
9.	கடைசல் நிலையம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
10.	தகர வேலைத்தளம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
11.	எரிவாயு சிலிண்டர் களஞ்சிய நிலையம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
12.	ஆயுர்வேத தேசிய மருந்து தயாரிப்பு அல்லது கலவை செய்யும் நிலையம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00

அட்டவணை - *(தொடர்ச்சி)*

	நிரல் I	நிரல் II		
	கைத்தொழிலின் தன்மை	இடத்தின் வருடாந்தப் பெறுமதி		
		750 ரூபாவிற்கு மேற்படாத விடத்து	750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத விடத்து	1,500 ரூபாவிற்கு மேற்படும் இடத்து
		ரூபா ச.	ரூபா ச.	ரூபா ச.
13.	கண்ணாடிப் பொருட்கள் அல்லது கண்ணாடித் தகடு களஞ்சியம் செய்தல்	500.00	750.00	1,000.00
14.	பிளாஸ்டிக் அல்லது இழைநார் தொடர்பான தொழிற்சாலை நடாத்துதல்	500.00	750.00	1,000.00
15.	100 கி. கிராமுக்கு மேல் தேயிலைத்தூள் களஞ்சியம் செய்தல்	500.00	750.00	1,000.00
16.	வேல்டிங் வேலைத்தலம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
17.	கடைசல் வேலைத்தலம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
18.	பெற்ரோல், டீசல் மற்றும் கனிய எண்ணெய் வகைகள் களஞ்சியம் செய்தல்	500.00	750.00	1,000.00
19.	விவசாய இரசாயனப் பொருட்கள் தயாரிப்பு அல்லது களஞ்சியம் செய்தல்	500.00	750.00	1,000.00
20.	வளி சீராக்கி, குளிரூட்டி அல்லது அதிகுளிரூட்டி திருத்தம் அல்லது சேர்விஸ் செய்தல்	500.00	750.00	1,000.00
21.	மின்சாரத் தொழிற்சாலை அல்லது மின் உபகரணங்கள் திருத்தும் நிலையம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
22.	பால் குளிரூட்டும் நிலையம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
23.	பத்திக் ஆடை உற்பத்தி நிலையம்	500.00	750.00	1,000.00
24.	சுண்ணக்கல் அரைத்தல்	500.00	750.00	1,000.00
25.	திரவச்சுண்ணம் தயாரிப்பு	500.00	750.00	1,000.00
26.	பெல்ஸ்பார் கற்குழி நடாத்துதல்	500.00	750.00	1,000.00
27.	சொப்பிங் உறைகள் தயாரித்தல்	500.00	750.00	1,000.00
28.	பொலிசெக் உறைகள் தயாரிப்பு	500.00	750.00	1,000.00
29.	காரீயம் உலர்த்தித் தயாரித்தல்	500.00	750.00	1,000.00
30.	காரீயச் சுரங்கம் நிலையம்	500.00	750.00	1,000.00
31.	காரீயம் சுத்தம் செய்தல்	500.00	750.00	1,000.00
32.	அலுமினியப் பொருட்கள் தயாரிப்பு	500.00	750.00	1,000.00
33.	அலுமினியத் தகடு தயாரிப்பு	500.00	750.00	1,000.00
34.	முச்சக்கரவண்டி திருத்த வேலைத்தளம்	500.00	750.00	1,000.00
35.	பால் சேகரிப்பு நிலையம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
36.	சுப்பர்போம் மெத்தை தயாரிப்பு நிலையம்	500.00	750.00	1,000.00
37.	கற்கள் வெட்டி ஒப்பமிடும் கைத்தொழில்	500.00	750.00	1,000.00
38.	நூல் நூற்கும் நிலையம்	500.00	750.00	1,000.00
39.	கனியவளங்கள் அகழும் நிலையம்	500.00	750.00	1,000.00
40.	உராய்வு எண்ணெய் களஞ்சியம் செய்து விற்குமிடம்	500.00	750.00	1,000.00
41.	பிஸ்கட் அல்லது சொக்கலேற் தயாரிப்பு	500.00	750.00	1,000.00
42.	பகற்காலப் பாதுகாப்பு நிலையம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
43.	கொக்கோ அல்லது பப்பாசிப்பால் உலர்த்தும் நிலையம்	500.00	750.00	1,000.00
44.	செவ்விளநீர் எண்ணெய் போத்தலில் அடைத்து விற்பனை செய்தல்	500.00	750.00	1,000.00
45.	வெளிநாட்டு மருந்துகள் களஞ்சியமும் விற்பனையும்	500.00	750.00	1,000.00
46.	எரிபொருள் நிரப்பு நிலையம்	500.00	750.00	1,000.00
47.	சவப்பெட்டி தயாரிப்பு நிலையம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
48.	மலர்ச்சாலை நடாத்துதல்	500.00	750.00	1,000.00
49.	விற்பனைக்கெனக் கரி களஞ்சியம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00

அட்டவணை - *(தொடர்ச்சி)*

நிரல் I	நிரல் II		
கைத்தொழிலின் தன்மை	இடத்தின் வருடாந்தப் பெறுமதி		
	750 ரூபாவிற்கு மேற்படாத விடத்து	750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத விடத்து	1,500 ரூபாவிற்கு மேற்படும் இடத்து
	ரூபா ச.	ரூபா ச.	ரூபா ச.
50. தென்னஞ் சிரட்டை, மட்டை, உலர்ந்த தென்னோலை களஞ்சியம் (விற்பனைக்காக)	500.00	750.00	1,000.00
51. பீரளு கடைசல் நிலையம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
52. கொப்பரா உலர்த்தும் நிலையம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
53. ஏலம், கராம்பு உலர்த்தும் நிலையம் நடாத்துதல்	500.00	750.00	1,000.00
54. டீசல் பம்பி திருத்த வேலைத்தளம்நடாத்துதல்	500.00	750.00	1,000.00
55. களிம்பு வகைகள் தயாரித்தல்	500.00	750.00	1,000.00
56. ஆயுர்வேத மூலிகை எண்ணெய்கள் தயாரித்தல்	500.00	750.00	1,000.00
57. முட்டைக்காக காடைக் கோழிப் பண்ணை நடாத்துதல்	500.00	750.00	1,000.00

12 - 257/3

மாத்தளை பிரதேச சபை

கைத்தொழில் வரி விதித்தல் -2021

மாத்தளை பிரதேச சபை 2020, நவெம்பர் மாதம் 05 ஆந் திகதி நடாத்திய அதன் பொதுச்சபைக் கூட்டத்தில் பின்வரும் 5.3.4ஆம் இலக்கம் கொண்ட கீழே தரப்பட்டுள்ள முன்மொழிவு நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் பொதுமக்களுக்கு அறியத் தரப்படுகின்றது.

இதற்கமைய 2021 ஆம் ஆண்டில் விதிக்கப்படும் கைத்தொழில் வரியை அந்த வருடத்தின் ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர் மாத்தளை பிரதேச சபையில் செலுத்திவிடுதல் வேண்டுமென மேலும் அறிவிக்கப்படுகின்றது.

யூ. எச். எம். கபில பண்டார ஹேன்தெனிய,
தவிசாளர்,
மாத்தளை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
மாத்தளை,
2020, நவெம்பர் 12.

தீர்மானம்

